# 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம்

**(தமிழ்நாடு சட்ட எண் 22/2009)**

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Schools (Regulation of Collection of Fee) Act, 2009

**(Tamil Nadu Act No.22 of 2009)**

(as on 31st October, 2023)

**தமிழாக்கம் :**

**தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்**

**சென்னை**

தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

2023

# 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம்
## (தமிழ்நாடு சட்ட எண் 22/2009)


| பிரிவு | பொருளடக்கம் |
| --- | --- |
| 1. | குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம். |
| 2. | பொருள்வரையறைகள். |
| 3. | கூடுதல் கட்டணத்தை வசூலிப்பதற்குத் தடை. |
| 4. | அரசால் கட்டணம் நிர்ணயிக்கப்படுதல். |
| 5. | குழுவினை அமைத்துருவாக்குதல். |
| 6. | கட்டணத்தை நிர்ணயிப்பதற்கான கூறுகள். |
| 7. | குழுவின் அதிகாரங்களும் அலுவற்பணிகளும். |
| 8. | கணக்குகளை முறைப்படுத்துதல். |
| 9. | தண்டனைகள். |
| 10. | நிறுமங்களால் செய்யப்படும் குற்றங்கள். |
| 11. | மாவட்டக் குழு. |
| 12. | குற்றச்செயல்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல். |
| 13. | பிற சட்டங்களின் செயல்பாடுகள். |
| 14. | நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு. |
| 15. | இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம். |
| 16. | விதிகளைச் செய்வதற்கான அதிகாரம். |

# 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம் தமிழ்நாடு சட்ட எண் 22/2009

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2009ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 5ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத்தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

**தமிழ்நாடு மாநிலத்தில் பள்ளிகளில் கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துவதற்கும் அத்துடன் தொடர்புடைய மற்றும் அதன் விளைவான விவரங்களுக்கும் வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு:—

1. **குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்.—** (1) இந்தச் சட்டம், 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. **பொருள்வரையறைகள்.—** இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,—

(a) "கல்வியாண்டு" என்பது, ஜூன் முதல் நாளன்று தொடங்கி மே கடைசி நாளன்று முடிகிற ஓர் ஆண்டு எனப் பொருள்படும்;

(b) "உதவிபெறும் பள்ளி" என்பது, மாநில நிதியங்களிலிருந்து உதவியாகப் பணத்தொகை எதனையும் பெறுகிற பள்ளி ஒன்று எனப் பொருள்படும்;

(c) "குழு" என்பது, பிரிவு 5இன்படி அமைத்துருவாக்கப்பட்ட குழு எனப் பொருள்படும்;

(d) "மாவட்டக் குழு" என்பது பிரிவு 11இன்படி அமைத்துருவாக்கப்பட்ட குழு எனப் பொருள்படும்.

(e) "கட்டணம்" என்பது, எந்த வகுப்பிற்கும் அல்லது படிப்புப் பிரிவுக்கும் மாணவர்களைச் சேர்ப்பதற்காகப் பள்ளியினால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும், அவ்வாறு வசூலிக்கப்படும் தொகை எதுவும் எனப் பொருள்படும்;

(f) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்;

(g) "அரசுப் பள்ளி" என்பது, அரசாலோ அல்லது உள்ளாட்சி அதிகாரஅமைப்பு எதனாலுமோ நடத்தப்படும் ஒரு பள்ளி எனப் பொருள்படும்;

(h) "உள்ளாட்சி அதிகாரஅமைப்பு" என்பது–

(i) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, ஈரோடு, திருப்பூர், வேலூர், தூத்துக்குடி மாநகராட்சிகள் அல்லது அப்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டம் எதனின்படியும் அமைத்துருவாக்கப்–படக்கூடிய பிற மாநகராட்சி எதுவும்; அல்லது

(ii) 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு

சட்டம் V/1920) படி அமைத்துருவாக்கப்பட்ட ஒரு நகராட்சி மன்றம்; அல்லது

(iii) 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) படி அமைத்துருவாக்கப்பட்ட ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது ஒரு கிராம ஊராட்சி,

எனப் பொருள்படும்.

(i) "மேலாண்மை" என்பது, மேலாண்மைக் குழுவை அல்லது பள்ளி விவகாரங்களை மேலாண்மை செய்வதற்கு அல்லது நிருவாகம் செய்வதற்கு அதிகாரங்கள் கொண்டிருக்கும் எந்தப் பெயராலும் அழைக்கப்படும் நபர் எவரையும், நபர்களின் அமைப்பையும், குழுவினையும், பிற ஆளுகை செய்யும் குழு எதனையும் உள்ளடக்கும்:

**வரம்புரை:** அற மற்றும் சமய நிறுவனங்கள் மற்றும் நிலைக்கொடைகள் மற்றும் வஃக்புகள் தொடர்பாக அப்போதைக்கு நடைமுறையில் இருக்கிற சட்டம் எதனாலும் அமைத்துருவாக்கப்பட்டு அல்லது அமர்த்தப்பட்டு எந்தப் பெயராலும் அழைக்கப்படும் வஃக்பு வாரியத்தின் பொறுப்புக்கட்டளையர் குழு அல்லது ஆளுகை அமைப்பானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒரு மேலாண்மை அமைப்பாகக் கருதப்படுதல் வேண்டும்.

(j) "தனியார் பள்ளி" என்பது, நபர் எவராலும் அல்லது நபர்களின் குழு எதனாலும் நிறுவப்பட்டு நிருவாகம் செய்யப்பட்டு வருகிற அல்லது பேணி வரப்படுகிற மற்றும் அப்போதைக்கு நடைமுறையில் இருக்கிற சட்டம் அல்லது ஒழுங்குமுறைச்

சட்டத்தொகுப்பு எதனின்படியும் தகுதிவாய்ந்த அதிகார அமைப்பால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட அல்லது ஒப்புதல் அளிக்கப்பட்ட தொடக்க முன்நிலைப்பள்ளி, தொடக்கநிலைப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி அல்லது மேல்நிலைப்பள்ளி எதுவும் எனப் பொருள்படும், ஆனால் அது,–

(i) உதவிபெறும் பள்ளி ஒன்றை;

(ii) மைய அரசால் அல்லது மாநில அரசால் அல்லது உள்ளாட்சி அதிகாரஅமைப்பு எதனாலும் நிறுவப்பட்டு, நிருவாகம் செய்யப்பட்டு வருகிற அல்லது பேணிவரப்படுகிற பள்ளி ஒன்றை;

(iii) பிறவாறான கற்பித்தல் எதுவுமின்றிச் சமயக் கல்வியை மட்டுமே அளிக்கிற, அதற்கு வகை செய்கிற அல்லது கற்பிக்கிற பள்ளி ஒன்றை,

உள்ளடக்காது.

**விளக்கம்.**– இந்தக் கூறின் நோக்கத்திற்காக,–

(1) "ஒழுங்குமுறைவிதித் தொகுப்பு" என்பது, ஏற்பளிக்கப்பட்ட மழலையர் பள்ளி மற்றும் தொடக்க நிலைப் பள்ளிகளுக்கான ஒழுங்குமுறைவிதித் தொகுப்பு, பதின்மப் பள்ளிகளுக்கான ஒழுங்குமுறைவிதித் தொகுப்பு மற்றும் ஆங்கிலோ–இந்தியப் பள்ளிகளுக்கான ஒழுங்குமுறைவிதித் தொகுப்பு எனப் பொருள்படும்.

(2) (i) தொடக்க முன்நிலைப் பள்ளியானது, முதல்நிலை மழலையர் வகுப்பு (pre KG) முதல் மேல்நிலை மழலையர் வகுப்பு (UKG) வரையில் வகுப்புகளைக் கொண்டதாயிருக்கும்;

(ii) தொடக்கப்பள்ளியானது, கீழ்நிலை மழலையர் வகுப்பு (LKG) முதல் V வரையிலான வகுப்புகளை அல்லது I முதல் V வரையிலான வகுப்புகளைக் கொண்டதாயிருக்கும்;

(iii) நடுநிலைப் பள்ளியானது, கீழ்நிலை மழலையர் வகுப்பு (LKG) முதல் VIII வரையிலான வகுப்புகளை அல்லது I முதல் VIII வரையிலான வகுப்புகளை அல்லது VI முதல் VIII வகுப்புகளைக் கொண்டதாயிருக்கும்;

(iv) உயர்நிலைப்பள்ளியானது, கீழ்நிலை மழலையர் வகுப்பு (LKG) முதல் X வரையிலான வகுப்புகளை அல்லது VI முதல் X வரையிலான வகுப்புகளை அல்லது IX மற்றும் X ஆகிய வகுப்புகளைக் கொண்டதாயிருக்கும்;

(v) மேல்நிலைப் பள்ளியானது, கீழ்நிலை மழலையர் வகுப்பு (LKG) முதல் XII வரையிலான வகுப்புகளை அல்லது I முதல் XII வரையிலான வகுப்புகளை அல்லது VI முதல் XII வரையிலான வகுப்புகளை அல்லது XI மற்றும் XII ஆகிய வகுப்புகளைக் கொண்டதாயிருக்கும்.

(3) மாநில நிதியங்களிலிருந்து உதவி என்ற வகையில் பணம் எதுவும் செலுத்தப்படாத வகுப்புகள் அல்லது படிப்புப் பிரிவுகள் எவற்றையும் நடத்துகிற உதவி பெறும் பள்ளிகள், அத்தகைய வகுப்புகள் அல்லது படிப்புப் பிரிவுகள் எந்த அளவுக்குத் தொடர்புடையனவாக இருக்கின்றனவோ அந்த அளவிற்குத் தனியார் பள்ளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

**3. கூடுதல் கட்டணத்தை வசூலிப்பதற்குத் தடை.–** (1) அரசுப் பள்ளி அல்லது உதவிபெறும் பள்ளி எதுவும், அந்தப் பள்ளியில் வகுப்பு அல்லது படிப்புப் பிரிவு எதற்கும், மாணவர்களைச் சேர்ப்பதற்காக அரசால் நிருணயிக்கப்பட்ட கட்டணத்திற்குக் கூடுதலாகக் கட்டணம் எதையும் வசூலித்தல் கூடாது.

(2) இந்தச் சட்டத்தின்படி, குழுவால் தீர்மானிக்கப்பட்ட கட்டணத்திற்குக் கூடுதலான கட்டணம்

எதுவும், ஒரு தனியார் பள்ளியில் வகுப்பு அல்லது படிப்புப் பிரிவு எதற்கும் மாணவர்களைச் சேர்ப்பதற்காக,–

(a) அத்தகைய தனியார் பள்ளியின் மேலாண்மையில் பொறுப்பில் இருக்கிற அல்லது அதற்குப் பொறுப்புடையவராய் இருக்கிற நபர் எவராலும்;

(b) தனக்காகவோ அல்லது அந்தத் தனியார் பள்ளிக்காகவோ அல்லது அத்தகைய தனியார் பள்ளியின் மேலாண்மையின் சார்பில் பிற நபர் எவராலும்,

வசூலித்தல் கூடாது.

(3) இடைநிலைக் கல்வி மையக் குழுவுடன் இணைக்கப்பட்ட பள்ளி எதனாலும் வசூலிக்கப்படும் கட்டணம் எதுவும், அந்தப் பள்ளியால் வழங்கப்படும் வசதிகளுக்குத் தகுந்தாற்போல் இருத்தல் வேண்டும்.

4. **அரசால் கட்டணம் நிர்ணயிக்கப்படுதல்.**– அரசானது, அரசுப் பள்ளிகளிலும் உதவிபெறும் பள்ளிகளிலும் உள்ள வகுப்பு எதற்கும் அல்லது படிப்புப் பிரிவு எதற்கும் மாணவர்களைச் சேர்ப்பதற்கான கட்டணத்தை நிர்ணயித்தல் வேண்டும்.

5. **குழுவினை அமைத்துருவாக்குதல்.**– (1) அரசானது, தனியார் பள்ளிகளில் வகுப்பு எதிலும் அல்லது படிப்புப் பிரிவு எதிலும் சேர்ப்பதற்கான கட்டணத்தைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காகக் குழு ஒன்றை அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(2) குழுவானது, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும், அதாவது:–

(a) [1][சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசனை செய்து], அரசால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி – தலைவர்,

(b) பள்ளிக் கல்வி இயக்குநர் – பதவிவழி உறுப்பினர்,

(c) பதின்மப் பள்ளிகள்(மெட்ரிகுலேஷன் பள்ளிகள்) இயக்குநர் – பதவிவழி உறுப்பினர்,

(d) தொடக்கக்கல்வி இயக்குநர் – பதவிவழி உறுப்பினர்,

(e) இணைத் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) பொதுப்பணித்துறை – பதவிவழி உறுப்பினர்,

(f) அரசு கூடுதல் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை – பதவிவழி உறுப்பினர் செயலாளர்.

(3) தலைவரின் பதவிக்காலம் அவர் அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலஅளவாக இருக்கும். மேலும் எந்தக் காரணத்திற்காகவும், அதற்கு முன்னதாகக் காலியிடம் எதுவும் ஏற்படுகின்ற நிகழ்வில், எஞ்சிய காலஅளவிற்கு அந்தக் காலியிடம் நிரப்பப்படுதல் வேண்டும்.

(4) தலைவர், முதல்நிலைக் குழுவிற்குப் பொருந்தக்கூடிய அதே அமர்வுக் கட்டணத்தையும் பயணப் படியையும் பெறுவதற்குத் தகுதியுடையவர் ஆவார்.

---

1. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்ட எண். 41/2017) பிரிவு 2 மாற்றியமைக்கப்பட்டது.

(5) குழுவை அமைத்துருவாக்கியதில் காலியிடம் எதுவும் இருக்கிறது அல்லது குறைபாடு எதுவும் இருக்கிறது என்ற காரணத்தினால் மட்டுமே குழுவின் செயல்பாடு அல்லது நடவடிக்கையானது செல்லாததாக இருத்தல் கூடாது.

(6) தலைவர், குழுவின் கூட்டத்திற்குத் தலைமை வகித்தல் வேண்டும்.

**6. கட்டணத்தை நிர்ணயிப்பதற்கான கூறுகள்.–** (1) குழுவானது பின்வரும் விவரங்களைக் கருத்தில்கொண்டு தனியார் பள்ளியொன்றால் விதிக்கப்படவேண்டிய கட்டணத்தை நிர்ணயித்தல் வேண்டும், அதாவது:–

(a) தனியார் பள்ளியின் இடஅமைப்பு;

(b) இருக்கக்கூடிய உள்கட்டமைப்பு;

(c)நிருவாகம் மற்றும் பேணிவருதல் அடிப்படையில் ஏற்படக்கூடிய செலவினம்;

(d)தனியார் பள்ளி வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்குத் தேவைப்படும் நியாயமான மிகையளவு;

(e)வகுத்துரைக்கப்படும் பிற விவரங்கள் எவையும்.

(2) குழு, தனியார் பள்ளியால் விதிக்கப்படத்தக்க கட்டணத்தை நிர்ணயித்ததின்பேரில், தொடர்புடைய பள்ளிக்குத் தன்முடிவைத் தெரிவித்தல் வேண்டும்.

(3) குழுவின் முடிவினால் குறையுற்ற தனியார் பள்ளி எதுவும், அந்தக் குழுவின் முடிவைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் குழுவின் முன்பு தன் மறுப்புரையைத் தாக்கல் செய்தல் வேண்டும்.

(4) குழு, தனியார் பள்ளியின் மறுப்புரையைப் பரிசீலனை செய்து, அத்தகைய மறுப்புரையைப் பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் ஆணைகளைப் பிறப்பித்தல் வேண்டும்.

(5) குழுவினால் பிறப்பிக்கப்பட்ட ஆணையானது, அறுதியானதாகவும், மூன்று கல்வியாண்டுகளுக்குத் தனியார் பள்ளிகளைக் கட்டுப்படுத்துவதாகவும் அமையும். மேற்சொன்ன காலஅளவின் இறுதியில், சீராய்வு செய்வதற்காக விண்ணப்பம் செய்ய தனியார் பள்ளிக்கு உரிமை உண்டு.

(6) குழு, எந்த வெவ்வேறுபட்ட தலைப்புகளின்கீழ் கட்டணம் வசூலிக்கப்படுதல் வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

**7. குழுவின் அதிகாரங்களும் அலுவற்பணிகளும்.–** (1) குழுவின் அதிகாரங்களும், அலுவற்பணிகளும் பின்வருபவையாக இருக்கும்,–

(a) தனியார் பள்ளிகளால், வசூலிக்கப்பட வேண்டிய கட்டணத்தைத் தீர்மானித்தல்;

(b) குழுவினால் தீர்மானிக்கப்படும் அல்லது அரசினால் நிர்ணயிக்கப்படும் கட்டணத்திற்கு மிகையாகக் கட்டணம் வசூலிக்கப்படுவது குறித்த முறையீடுகளை விசாரித்தல். குழுவானது, தொடர்புடைய தனியார் பள்ளியில் அல்லது உதவிபெறும் பள்ளியின் மேலாண்மையிடமிருந்து அல்லது அரசுப் பள்ளியிடமிருந்து சான்றினையும், விளக்கத்தினையும் பெற்ற பின்பு, குழுவினால் தீர்மானிக்கப்படும் அல்லது அரசால் நிர்ணயிக்கப்படும் கட்டணத்திற்கு மிகையான கட்டணத்தைத் தனியார் பள்ளி அல்லது அரசுப் பள்ளி அல்லது உதவிபெறும் பள்ளி வசூலித்திருக்கிறது என்ற முடிவுக்கு வருமானால் அது, தனியார் பள்ளி அல்லது உதவிபெறும் பள்ளியின் அங்கீகாரம் அல்லது ஒப்புதலை

ரத்து செய்வதற்காக அல்லது தனியார் பள்ளியை அல்லது அரசுப் பள்ளியை அல்லது உதவிபெறும் பள்ளியைப் பொறுத்துத் தான் பொருத்தமெனக் கருதும் பிற நடவடிக்கை எதனையும் எடுப்பதற்காக உரிய தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்புக்குப் பரிந்துரைத்தல் வேண்டும்.

(2) குழு பின்வரும் அதிகாரம் உடையதாக இருக்கும்,–

(i) ஒவ்வொரு தனியார் பள்ளியையும், குழுவினால் குறிப்பிடப்படும் தேதிக்குள் அதன் கூர்ந்தாய்வுக்காகத் தொடர்புடைய அனைத்து ஆவணங்களுடனும், கணக்குப் புத்தகங்களுடனும், வசூலிக்கக் கருதியிருக்கிற அப்பள்ளியின் கட்டண அமைப்பைக் குழுவின் முன்பு வைக்குமாறு கோருதல்;

(ii) தனியார் பள்ளி வசூலிக்கக் கருதியிருக்கிற கட்டணம் நியாயமானதாகவோ மற்றும் ஆதாயமானதாகவோ மிகைஅளவிலான கட்டணம் விதிப்பதாகவோ இல்லை என்பதை சரி பார்த்து உறுதி செய்து கொள்ளுதல்;

(iii) அந்தக் கட்டண அமைப்பிற்கு ஒப்பேற்பு அளித்தல் அல்லது தனியார் பள்ளியால் விதிக்கப்படக்கூடிய பிற கட்டணத்தைத் தீர்மானித்தல்.

(3) குழுவானது, பின்வரும் அதிகாரம் உடையதாக இருக்கும்,–

(i) இடைநிலைக் கல்விக்கான மையக் குழுவுடன் இணைக்கப்பட்டுள்ள பள்ளியால் வசூலிக்கப்படும் கட்டணம் பள்ளியால் அளிக்கப்படும் வசதிகளுக்குத் தகுந்ததாக இருக்கிறதா என்பதனைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்ளுதல்;

(ii) இடைநிலைக் கல்விக்கான மையக் குழுவுடன் இணைக்கப்பட்டுள்ள பள்ளியால் மிகைக் கட்டணம் வசூலிக்கப்படுவது குறித்த முறையீடுகளை விசாரித்தல்; மற்றும்

(iii) அந்தப் பள்ளி மிகைக்கட்டணம் வசூலித்திருக்கிறது என்ற முடிவுக்கு அது வருமாயின், இடைநிலைக்கல்வி மையக் குழுவிற்கு அந்தப் பள்ளியின் இணைப்பினை நீக்குமாறு பரிந்துரை செய்தல்.

(4) குழுவானது, தன் அலுவற்பணிகளை ஆற்றுவதில் எழக்கூடிய அனைத்து விவரங்களிலும் தனது சொந்த நடைமுறையை முறைப்படுத்துவற்கு அதிகாரம் உடையது ஆகும் மற்றும் பின்வரும் விவரங்களைப் பொறுத்து இந்தச் சட்டத்தின்படி விசாரணை எதனையும் செய்யும் நோக்கத்திற்காக, உரிமை வழக்கொன்றை விசாரணை செய்கையில், 1908ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் V/1908) படி ஓர் உரிமையியல் நீதிமன்றத்திற்குள்ள அதிகாரங்கள் அனைத்தையும் கொண்டதாக இருக்கும், அவையாவன:–

(i) சாட்சி எவருக்கும் அழைப்பாணை அனுப்பி அவரது வருகைப்பதிவை நடைமுறைப்படுத்துதல் மற்றும்

உறுதிமொழியின் பேரில் அவரை விசாரணை செய்தல்;

(ii) ஆவணம் எதனையும் வெளிக்கொணர்ந்து முன்னிடுமாறு கோருதல்;

(iii) ஆணையுறுதி ஆவணங்களின் பேரில் சாட்சியத்தைப் பெறுதல்;

(iv) சாட்சியை விசாரணை செய்வதற்காக ஆணை எதனையும் பிறப்பித்தல்.

8. **கணக்குகளை முறைப்படுத்துதல்.–** தனியார் பள்ளிகளால் பேணிவரப்படும் கணக்குகளை வகுத்துரைக்கப்படும் வகையில் அரசானது, முறைப்படுத்தலாம்.

9. **தண்டனைகள்.–** (1) இந்தச் சட்டத்தில் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளை மீறுகிற எவர் ஒருவரும், குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டதன்பேரில், மூன்றாண்டுகளுக்குக் குறையாத ஆனால் ஏழாண்டுகள் வரை நீட்டிக்கப்படக்கூடிய ஒரு காலஅளவுக்குச் சிறைத் தண்டனையும் ஐந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக்கூடிய அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்:

**வரம்புரை:** ஆனால் நீதிமன்றமானது தீர்ப்பில் குறிப்பிடப்படத்தக்க மற்றும் தனித்துவமான காரணம் எதற்காகவும், மூன்றாண்டுகளுக்குக் குறைவானதொரு காலஅளவுக்குச் சிறைத்தண்டனையை விதிக்கலாம்.

(2) இந்தப் பிரிவின்படி குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்ட நபர், இந்தச் சட்டத்தை மீறிய வகையில் எந்த மாணவரிடமிருந்து மிகைக்கட்டணம்

வசூலிக்கப்பட்டதோ அந்த மாணவருக்கு அந்த மிகைக் கட்டணத்தைத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

**10. நிறுமங்களால் செய்யப்படும் குற்றங்கள்.**– (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளில் எதற்கும் எதிரான குற்றச்செயல் ஒன்று ஒரு நிறுமத்தால் செய்யப்படுகிறபோது, அந்தக் குற்றச்செயல் செய்யப்பட்ட நேரத்தில் அந்த நிறுமத்தின் அலுவலை நடத்தி வருவதற்குப் பொறுப்பாயிருந்தவரும் பொறுப்பிலிருந்தவருமான நபர் ஒவ்வொருவரும், அதோடு அந்த நிறுமமும் அந்தக் குற்றச்செயலை செய்ததாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மேலும், அதற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்குஇணங்கிய வகையில் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்:

**வரம்புரை**: ஆனால், நபர் எவரும், அத்தகைய குற்றச்செயல் தமக்குத் தெரியாமல் செய்யப்பட்டதென்று அல்லது அந்தக் குற்றச்செயல் செய்யப்பட்டதைத் தடுப்பதற்குத் அவர் உரிய முயற்சி அனைத்தையும் எடுத்தார் என்று மெய்ப்பிப்பாரானால், இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் அத்தகைய நபரை தண்டனை எதற்கும் உள்ளாக்காது.

(2) உட்பிரிவு (1)இல் என்ன அடங்கியிருந்த போதிலும், அத்தகைய குற்றச்செயல் எதுவும் ஒரு நிறுமத்தால் செய்யப்பட்டு, அந்த நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரின் இசைவுடனோ அல்லது மறைமுக ஆதரவுடனோ செய்யப்பட்டு இருக்கிறது அல்லது அவரது கவனக்குறைவு எதற்கும் சாட்டத்தக்கதாயிருக்கிறது என்று மெய்ப்பிக்கப்படும் போது அந்த இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் அந்தக் குற்றச் செயலைச் செய்ததாகக் கருதப்படுதலும் அதற்கு எதிராக

நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதற்கிணங்க தண்டிக்கப்படுவதற்கு உள்ளதாலும் வேண்டும்.

**விளக்கம்**.– இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக,–

(a) "நிறுமம்" என்பது, கூட்டுக்குழுமம் எதுவும் எனப் பொருள்படும்; 'மற்றும் ஒரு பொறுப்புக்கட்டளை, ஒரு நிறுவகம், ஒரு குழுமம் அல்லது தனியாட்களின் பிற கழகம் எதனையும் உள்ளடக்கும்.

(b) "இயக்குநர்" என்பது–

(i) ஒரு நிறுவகம் தொடர்பாக, அந்த நிறுவகத்தின் கூட்டாளி எனப் பொருள்படும்;

(ii) ஒரு குழுமம், ஒரு பொறுப்புக்கட்டளை அல்லது தனியாட்களின் பிற சங்கம் தொடர்பாகக், குழுமம், பொறுப்புக்கட்டளை அல்லது பிற சங்கத்தின் விதிகளின்படி, அந்தக் குழுமம், பொறுப்புக்கட்டளை அல்லது பிற சங்கத்தின் அலுவல்களின் மேலாண்மைப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிற நபர் எனப் பொருள்படும்.

**11. மாவட்டக் குழு**.– (1) ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும், ஒரு மாவட்டக் குழு இருத்தல் வேண்டும். அது மாவட்டத் தலைமைக் கல்வி அலுவலரைத் தலைவராகவும் வகுத்துரைக்கப்படும் பிற உறுப்பினர்களைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

(2) மாவட்டக் குழு அல்லது அதனால் இதன்பொருட்டு அதிகாரம் அளிக்கப்பட்ட மேற்சொன்ன குழுவின் உறுப்பினர் எவரும், தனியார் பள்ளி எதனின்

வழக்கமான வேலைநேரத்தின்போது, எந்தச் சமயத்திலும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளோ அல்லது அதன்படி செய்யப்பட்டுள்ள விதிகளோ மீறப்படுகின்றன அல்லது மீறப்பட்டிருக்கின்றன என அது அல்லது அவர் நம்புவதற்கு காரணம் பெற்றிருந்தால், அத்தகைய தனியார் பள்ளியில் அல்லது அதன் வளாகம் எதிலும் அல்லது அந்தத் தனியார் பள்ளி மேலாண்மைக்குச் சொந்தமான வளாகம் எதிலும் நுழைந்து, அந்தத் தனியார் பள்ளிக்கு அல்லது அதன் மேலாண்மைக்குச் சொந்தமான பதிவுரு, கணக்குகள், பதிவேடு அல்லது பிற ஆவணம் எதையும், அத்தகைய பதிவுரு, கணக்குகள், பதிவேடு அல்லது பிற ஆவணம் எதுவும் அந்தத் தனியார் பள்ளியுடன் எந்த அளவிற்குத் தொடர்புடையதாயிருக்கிறதோ அந்த அளவிற்குச் சோதனையிட்டு ஆய்வு செய்யலாம் மற்றும் அந்த அளவிற்குச் சோதனையிட்டு அவ்வாறு மீறப்படுகிறதா அல்லது மீறப்பட்டிருக்கின்றதா என்பதைக் கண்டறிகின்ற நோக்கத்திற்காக அத்தகைய பதிவுரு, கணக்குகள், பதிவேடு அல்லது பிற ஆவணம் எதனையும் கைப்பற்றலாம்.

(3) சோதனையிடுதல் மற்றும் கைப்பற்றுதல் தொடர்பான, 1973ஆம் ஆண்டு குற்றவழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் 2/1974) வகைமுறைகள் கூடுமான அளவிற்கு உட்பிரிவு (2)இன்படி செய்யப்படும் சோதனையிடுதலுக்கும் மற்றும் கைப்பற்றுதலுக்கும் பொருந்துவனவாகும்.

**12. குற்றச்செயல்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.–** நீதிமன்றம் எதுவும், அரசின் அல்லது இதன்பொருட்டு அரசு அதிகாரமளிக்கும் அலுவலரின் ஒப்புதல் இன்றி, இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் எதனையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் கூடாது.

**13. பிற சட்டங்களின் செயல்பாடுகள்.–** இந்தச் சட்டத்தில் பிறவாறு வகைசெய்யப்பட்டவாறு தவிர, இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதற்கும் கூடுதலாக இருத்தல் வேண்டுமேயன்றி அவற்றுக்கு ஊறுவிளைவிப்பதாக இருத்தல் கூடாது.

**14. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.–** இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளின்படி நல்லெண்ணத்தில் செய்த அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதற்காகவும், குழுவுக்கு அல்லது அதன் உறுப்பினர்களுக்கு எதிராகவோ, அரசுக்கு அல்லது இந்தச் சட்டத்தினாலோ அதன் வழியாலோ அதிகாரங்களைச் செலுத்துவதற்கு அல்லது அலுவற்பணிகளைப் புரிவதற்கு அதிகாரம் அளிக்கப்படும் அலுவலர் எவருக்கும், அதிகாரஅமைப்பு எதற்கும் அல்லது நபர் எவருக்கும், எதிராகவோ உரிமைவழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதல் கூடாது.

**15. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.–** இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்குப் பின்னர் குழுவை முதலில் அமைப்பதில் அல்லது பிறவாறு இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல்விளைவு அளிப்பதில், இடர்ப்பாடு எதுவும் எழுமானால், அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானதாகவோ அல்லது உகந்ததாகவோ தனக்குத் தோன்றக்கூடிய, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரண்படாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்:

**வரம்புரை:** ஆனால் அத்தகைய அறிவிக்கை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதியிலிருந்து

ஐந்தாண்டுகள் காலஅளவு முடிவடைந்த பின்னர் செய்யப்படுதல் கூடாது.

**16. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.–** (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றில் எவற்றையுமோ நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி ஒவ்வொன்றும் அல்லது பிறப்பிக்கப்படும் அறிவிக்கை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர் இயன்றவரையில் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடரோ அதை அடுத்து வரும் கூட்டத்தொடரோ முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை எதையும் அச்சட்டமன்றப்பேரவை மாற்றியமைக்குமானால் அல்லது அந்த விதியோ, அறிவிக்கையோ செய்யப்படவோ பிறப்பிக்கப்படவோ கூடாது என்று அப்பேரவை முடிவு செய்யுமானால், அதன்பின்பு அந்த விதியோ அறிவிக்கையோ அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே செயல்வடிவம் பெறுதல் வேண்டும் அல்லது செயல்வடிவம் பெறாது போதல் வேண்டும். எனினும் அவ்வாறு மாற்றியமைப்பது அல்லது செயல்வடிவம் பெறாது போகச்செய்வது எதுவும், அந்த விதியின்படியோ அறிவிக்கையின்படியோ முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.